தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில்

## திருவொற்றியூர், சென்னை-19.

## வேலை வாய்ப்பு விண்ணப்பம் கோரும் விளம்பர அறிவிப்பு

சென்னை-19, திருவொற்றியூர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலில் கீழ்க்கண்ட விவரப்படியான காலிப்பணியிடங்களுக்கு தகுதியுள்ள இந்து மதத்தினைச் சார்ந்த நபர்களிடமிருந்து 30.12.2025 முதல் 30.01.2026 வரை அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | இளநிலை உதவியாளர் | PAY MATRIX - 22<br>18500 – 58600<br>அடிப்படை சம்பளம்<br>ரூ.18500 | 2 | 10-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட அதற்கு இணையான படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 2. | வசூல் எழுத்தர் | PAY MATRIX - 22<br>18500 – 58600<br>அடிப்படை சம்பளம்<br>ரூ.18500 | 1 | 10-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 3. | அலுவலக உதவியாளர் | PAY MATRIX - 17<br>15900 – 50400<br>அடிப்படை சம்பளம்<br>ரூ.15900 | 1 | 8-ம் வகுப்பு தேர்ச்சி அல்லது அதற்கு இணையான அரசால் அங்கீகரிக்கப்பட்ட படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 4. | காவலர் | PAY MATRIX - 17<br>15900 – 50400<br>அடிப்படை சம்பளம்<br>ரூ.15900 | 4 | தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும் |
| 5. | வேதபாராயணம் | PAY MATRIX -16<br>15700 – 50000<br>அடிப்படை சம்பளம்<br>ரூ.15700 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.<br>2. யாதொரு சமய நிறுவனங்களால் அல்லது அரசு நிறுவனங்களால் அல்லது ஏனைய யாதொரு நிறுவனத்தால் நடத்தப்படும் ஆகமபள்ளி அல்லது வேதபாடசாலையில் தொடர்புடைய துறையில் குறைந்தபட்சம் மூன்றாண்டு படிப்பினை மேற்கொண்ட தற்கான சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும். |

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | ஊதிய விகிதம் | காலிப் பணியிடங்கள் எண்ணிக்கை | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 6. | உதவி சுயம்பாகம் | PAY MATRIX -10<br>10000 – 31500<br>அடிப்படை சம்பளம்<br>ரூ.10000 | 1 | 1. தமிழ் மொழியில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.<br>2. கோயில்களின் பழக்க வழக்கங்களுக் கேற்ப நெய்வேத்தியம் மற்றும் பிரசாதம் தயாரிக்கத் தெரிந்திருக்க வேண்டும். |
| | | கூடுதல் | 10 | |

விண்ணப்பதாரர் 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பணியிட விபரங்களுக்கான கல்வித்தகுதி, வயதுவரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டுக் தெரிந்து கொள்ளலாம். விண்ணப்பப்படிவம் மற்றும் நிபந்தனைகளை hrce.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உதவி ஆணையர்/ செயல்அலுவலர், அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை-19 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்.30.01.2026 அன்று மாலை 5.45 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

ஒம்/-.ஆர்.ஹரிஹரன்
தக்கார்/ துணைஆணையர்

ஒம்/-கே.எஸ்.நற்சோணை
உதவி ஆணையர்/செயல் அலுவலர்

# விண்ணப்பப்படிவம்

புகைப்படம்

பெயர் :

முகவரி :

கல்வித்தகுதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) :

பிறந்த தேதி/ வயது :

சமயம் :

சாதி (சான்று இணைக்கப்பட வேண்டும்) :

முன்னுரிமையின் விவரம் :

இதர தகுதிகள் விவரம் :

தொலைபேசி / கைப்பேசி எண் :

விண்ணப்பிக்கும் பணியின் பெயர் :
(ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாக
விண்ணப்பிக்க வேண்டும்)

மருத்துவச்சான்று :
(நகல் இணைக்கப்பட வேண்டும்)

இடம் :

நாள்: விண்ணப்பதாரர் கையொப்பம்

இணைப்புகள்

1. கல்வித்தகுதி சான்றின் நகல்கள் (Tc & Marklist)
2. சாதிச்சான்று நகல் (வட்டாட்சியரால் வழங்கப்பட்டது)
3. குடும்ப அடையாள அட்டை நகல்
4. முன்னுரிமைக்கான சான்றின் நகல் (Priority Certificate)
5. ஆதார் அட்டை நகல்
6. சென்னை மாவட்ட விண்ணப்பதாரர்கள் ரூ.50/-ம், இதர மாவட்ட விண்ணப்பதாரர்கள் ரூ.75/-க்கான தபால் தலையுடன் கூடிய உறை.

## நிபந்தனைகள்

| | |
|---|---|
| 1. | திருக்கோயில் மூலம் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி மட்டுமே உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்க வேண்டும். உதவி ஆணையர்/செயல்அலுவலர், அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில், திருவொற்றியூர், சென்னை-19 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பப்படிவம் மற்றும் நிபந்தனைகளை hrce.tn.gov.in என்ற இணையதளத்திலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பணியிட விபரங்களுக்கான கல்வித்தகுதி, வயதுவரம்பு, நிபந்தனைகள் மற்றும் இதர விவரங்களை அலுவலக வேலை நேரங்களில் நேரில் கேட்டுக் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம். |
| 2. | விண்ணப்பதாரர் 01.07.2025 அன்று 18 வயது பூர்த்தியடைந்தவராகவும் 45 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். |
| 3. | விண்ணப்பதாரர்கள் தமிழில் நன்கு எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். மேலும் இந்து மதத்தை சார்ந்தவராகவும் இறை நம்பிக்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். |
| 4. | விண்ணப்பத்துடன் கல்வித்தகுதிக்குரிய சான்றிதழ் மற்றும் பிற ஆவணங்களுக்கு சான்றிட்ட ஜெராக்ஸ் நகல் மட்டுமே அனுப்பப்பட வேண்டும். அசல் சான்றிதழ் எக்காரணத்தினை முன்னிட்டும் அனுப்பக்கூடாது. அசல் சான்றிதழ் நேர்முகத்தேர்வின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 5. | விண்ணப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரர்களும் உடல் தகுதி சான்று பெற்று அதன் நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். |
| 6. | மேற்கண்ட பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கூடுதல் தகுதி என்பது இத்திருக்கோயிலின் காலகாலமாக பின்பற்றி பணியாற்றி வந்த விவரங்களின் அடிப்படையிலேயே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. |
| 7. | நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள், நன்னடத்தைக்காகவோ அல்லது அமைதியை காப்பாற்றவோ ஜாமினில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், பட்டகடனை தீர்க்க முடியவில்லை என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், அரசு பணியிலிருந்தும், இதர நிறுவனங்களிலிருந்தும், திருகோயில்களிலிருந்தும் விலக்கப்பட்டவர்கள் திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் போன்ற நபர்கள் விண்ணப்பிக்க தகுதி அற்றவர்கள். |
| 8. | இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பில் காணும் பணியிடங்கள் இத்திருக்கோயிலின் பராம்பரியம் மற்றும் நடைமுறையில் உள்ள பணியிடங்கள் என்பதால், அதனடிப்படையில் பணியிடங்களுக்கான தகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 30.01.2026 அன்று மாலை 5.45 மணி வரை மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும் . அதன் பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டாது. |
| 9. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத்தபாலில் ஒப்புதல் அட்டையுடன் மட்டுமே அனுப்ப வேண்டும். |
| 10. | நிர்ணயிக்கப்பட்ட கடைசி நாளுக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது. மேலும் தகுதியான விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். |
| 11. | பூர்த்தி செய்து திருக்கோயிலுக்கு வரப்பெறும் விண்ணப்பங்களில் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே நேர்காணலுக்கான அறிவிப்பு அனுப்பப்படும். |
| 12. | பணி நியமனம் அரசாணை எண்.114, சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அநி4-1) நாள்.03.09.2020 விதிகளுக்குட்பட்டது. (பதிவிறக்கம் செய்து அறியவும்) |

ஒம்/-.ஆர்.ஹரிஹரன்
தக்கார்/ துணைஆணையர்

ஒம்/-கே.எஸ்.நற்சோணை
உதவி ஆணையர்/செயல் அலுவலர்